**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (9.1.2018) சட்டப்பேரவையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் ''ஒகி'' புயலின் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆற்றிய உரை.**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த 29.11.2017 அன்று நண்பகல் 12 மணியளவில் இலங்கைக்கு தென்கிழக்கில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்பான அறிவிப்பு மாநில நிவாரண ஆணையர் / முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சென்னை மண்டல இந்திய வானிலை ஆய்வு மைய இயக்குநர் அவர்களால் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

இந்த தகவலின் அடிப்படையில், மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் 29.11.2017 அன்று12.15 மணிக்கு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து புது தில்லியில் உள்ள இந்திய வானிலை ஆய்வு மையத்திலிருந்து வெளியிடப்பட்ட அனைத்து அறிவிக்கைகளும் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக உடனுக்குடன் மாவட்ட ஆட்சியர்களுக்கும், மீன் வளத் துறை மற்றும் தொடர்புடைய பிற துறைகளின் களப் பணியாளர்களுக்கும் அனுப்பப்பட்டன.

உயர் அலைவரிசை தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம், ஆழ்கடலில் 40 கடல் மைல் தொலைவு வரை மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களுக்கு 29.11.2017 அன்று பிற்பகல்2.15 மணிக்கு எச்சரிக்கை தகவல் வழங்கப்பட்டு, 100 படகுகளில் தங்களது சொந்த ஊர்களுக்கும் சிலர் அருகாமையில் உள்ள ஊர்களுக்கும் கரை திரும்பினர்.100 கடல் மைல்களுக்கு மேல் மீன்பிடித் தொழிலில் ஈடுப்பட்டிருந்த, புயல் சின்னம் உருவாவதற்கு முன்னரே ஆழ் கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்களுக்கு மேற்படி எச்சரிக்கை தகவல்கள், உரிய தொழில் நுட்ப கருவிகள் இன்மையால் சென்றடையவில்லை.

30.11.2017 அன்று நள்ளிரவு 12 மணியளவில் புயல் உருவாகி விட்டதாக, இந்திய வானிலை மையத்தினால் வெளியிடப்பட்டு, 12.34 மணியளவில் பெறப்பட்ட முன்னெச்சரிக்கை அறிவிப்பில் கண்ட தகவல்களை கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர்களுக்கும், மீன் வளத் துறை இயக்குநருக்கும் மின்னஞ்சல், கைபேசி மற்றும் வாட்ஸ்ஆப் மூலமாக உடனுக்குடன் தகவல்கள் தெரிவிக்கப்பட்டு, பொது மக்களுக்கு பார்வைக்காக 30.11.2017 அன்று பிற்பகல் 1.04 மணிக்கு தெரிவிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்ட மேற்கு பகுதிகளில் வசித்து வரும் மீனவர்கள் பல நாட்கள் ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு, பெரும்பாலும் 15 முதல் 45 நாட்களுக்கு பிறகே கரை திரும்புவார்கள். 29.11.2017—க்கு முன்னர் இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தினால் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாவது குறித்த தகவல்கள் பெறப்படவில்லை. புயல் சின்னம் உருவான தகவல் 30.11.2017 அன்று தான் பெறப்பட்டது.

29.11.2017 அன்று 12.34 மணியளவில், இந்திய வானிலை மையத்தினால் வழங்கப்பட்ட எச்சரிக்கை செய்தியினை, அன்றே பிற்பகல் 2.30 மணியளவில் மீனவர்கள் அனைவருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மீனவர்கள் எவரும் கடலுக்கு செல்லவில்லை.

இதனைத் தொடர்ந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 30.11.2017 அன்று காலை 1044 நபர்கள் தாழ்வான பகுதிகளிலிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்றப்பட்டனர். இந்நிலையில் புயல் கரையை கடக்கத் தொடங்கியது. பின்னர், எனது உத்தரவின்படி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மீன் வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உடனடியாகச் சென்று மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதமாக மேற்கொண்டனர். இப்பணிகளை மேலும் துரிதப்படுத்த 2 தேசிய பேரிடர் மீட்புக் குழுக்களும், 7 மாநில பேரிடர் மீட்புக் குழுக்களும்

அனுப்பப்பட்டனர். இது தவிர, கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை தேடி மீட்டெடுக்க, இந்திய கடற்படை, இந்திய கடலோர காவல் படை மற்றும் இந்திய விமானப் படை ஆகியவற்றை அனுப்புமாறு மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களையும், மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களையும் தமிழ்நாடு அரசு வலியுறுத்தியது.

மேலும், 11 மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் ஆகியோர் மீட்பு, நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள நான் உடனடியாக அனுப்பி வைத்தேன். பிற மாநிலங்களில் கரை சேர்ந்த மீனவர்களை அவரவர்களது சொந்த ஊர்களுக்கு அழைத்து வரும் பணியினை ஒருங்கிணைக்க 5 இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளையும் நான் அனுப்பி வைத்தேன். பிற மாநிலங்களில் கரை சேர்ந்த மீனவர்கள் தங்களது சொந்த ஊர் நலமாக திரும்புவதற்காக ஒவ்வொருக்கும் உணவுப் படியாக தலா ரூபாய் இரண்டாயிரமும், அதிகபட்சமாக மீன்பிடி விசைப்படகிற்கு ஆயிரம் லிட்டர் எரிஎண்ணெய் வழங்கப்பட்டது. அரசால் அனுப்பி வைக்கப்பட்ட 5 மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு சென்றடைந்து, எடுத்த நடவடிக்கைகளால் அங்கு தஞ்சமடைந்திருந்த 217 மீன்படி படகுகள் மற்றும், 1,724 தமிழ்நாடு மீனவர்கள் பத்திரமாக சொந்த ஊர்களுக்கு படகுகளுடன் அழைத்து வரப்பட்டனர்.

மேலும், விவசாய நிலங்கள், மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட சேதாரங்களை மதிப்பிடும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

மாநிலத்திலுள்ள உயர் அதிகாரிகளுடன் தினசரி அடிப்படையில் நான் ஆய்வு கூட்டங்கள் நடத்தி, மீட்பு, நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை முடுக்கிவிட்டேன். களப்பணிக்காக 8,179 களப்பணியாளர்கள் மற்றும் 5,805 இதர மாவட்ட களப்பணியாளர்கள் என மொத்தம் 13,984 களப்பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். குறிப்பாக 6,150 தமிழ்நாடு மின் பகிர்மான கழக பணியாளர்கள் மூலமாக, 15,858 விழுந்த மின்கம்பங்கள், 95 சேதமடைந்த மின்மாற்றிகள் சீரமைக்கப்பட்டு, 10 நாட்களுக்குள் மின்சார விநியோகம் வழங்கப்பட்டது; குடிநீர் மீண்டும் தங்கு தடையின்றி விநியோகம் செய்யப்பட்டது; சாலைகளில் விழுந்த

மரங்கள் முற்றிலும் அகற்றப்பட்டு, சாலைகளில் ஏற்பட்ட சேதாரங்கள் சீரமைக்கப்பட்டு, போக்குவரத்து உடனடியாக துவங்கப்பட்டது. மேலும், காணாமல் போன மீனவர்களை துரிதமாக மீட்கும் பொருட்டு இந்திய கடற்படை, கடலோர காவல் படை மற்றும் இந்திய விமானப் படை அதிகாரிகளுடனும் ஆய்வுக் கூட்டம் 6.12.2017 அன்று எனது தலைமையில் நடத்தப்பட்டது.

மேலும், 12.12.2017 அன்று நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொண்டேன். அப்போது, உயிரிழந்த மீனவர் குடும்பங்களுக்கு தலா ரூபாய் இருபது லட்சம் நிவாரண நிதியுதவி வழங்கவும், ஊனமடைந்த மீனவர்களுக்கு மறுவாழ்வு நிதியாக ரூபாய் ஐந்து லட்சம் வழங்கவும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மீனவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் நிவாரண நிதி வழங்கவும் உத்தரவிட்டேன். மேலும், மீனவர் குடும்பங்களுக்கு, வாழ்வாதார உதவியாக ஐந்தாயிரம் ரூபாயும், காணாமல் போன மீனவர் குடும்பங்களுக்கு சிறப்பு வாழ்வாதார உதவியாக ஐந்தாயிரம் ரூபாயும் வழங்க உத்தரவிட்டேன். மேலும், இறந்த மீனவர் குடும்பத்தில் ஒருவருக்கு அவரவர் கல்வி தகுதிக்கு ஏற்றவாறு தமிழ்நாடு அரசு நிறுவனத்தில் வேலை வாய்ப்பு வழங்கவும் உத்தரவிட்டேன். காணாமல் போன மீனவர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ஏதுவாக தற்போதுள்ள ஏழு வருட கால அளவை குறைப்பதற்கான சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வருவாய் நிர்வாக ஆணையர் தலைமையில் ஒரு குழுவை நியமிக்க உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், காணாமல் போன மீனவர்களை தங்கள் படகுகள் மூலம் தேடுவதற்கு கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் தாமாகவே முன்வந்ததை அடுத்து அவர்களின் தேடும் பணிகளுக்கு தேவையான எரி எண்ணெய் மற்றும் உணவுப் பொருட்களுக்கான செலவினத்தையும் தமிழ்நாடு அரசே வழங்கியுள்ளது.

மீனவர்களுக்காக கம்பியில்லா தொலை தொடர்பு சாதனங்கள் (Wireless sets) 62 கோடியே 14 லட்சம் ரூபாய்க்கு வழங்கிட தமிழ்நாடு அரசு உத்தரவிட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

'ஒகி' புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களது உடைமைகளாகிய படகு, வலை மற்றும் அவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களின் சேத மதிப்பீடு துரிதமாக செய்யும் பொருட்டு, குழு அமைக்கப்பட்டு, சேத மதிப்பீடு நடைபெற்று வருகிறது. இம்மதிப்பீட்டின் அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும்.

இதே போன்று, மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு, அவர்களுக்கும் நிவாரண உதவியாக குடும்பம் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டேன். மேலும், மீனவர் அல்லாத பிற குடும்பத்தினருக்கு வழங்கப்படும் நிவாரண நிதியை உயர்த்தி வழங்க வேண்டும் என்று என்னிடம் வரப்பெற்ற கோரிக்கையினை பரிசீலித்து, மீனவர் அல்லாத பிற குடும்பத்தினரின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 4 லட்சம் ரூபாய் நிவாரண உதவியுடன் கூடுதலாக 6 லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டேன்.

மேலும், 19.12.2017 அன்று கன்னியாகுமரி வந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை சந்தித்து 'ஒகி' புயலின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் வடகிழக்குப் பருவத்தில் பெய்த தொடர் மழையின் காரணமாக சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளைப் பற்றிய விரிவான அறிக்கையையும், சேதாரங்களின் மதிப்பீடுகளையும் தெரிவித்து, அவற்றை நிரந்தரமாக புனரமைக்க மத்திய அரசிடம் நிவாரணம் கோரி விரிவான மனு ஒன்றையும் அளித்தேன்.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களை சந்தித்த போது, 'ஒகி' புயலினால் ஏற்பட்ட பாதிப்புகள் மிகவும் கடுமையானதாக இருப்பதால், அதனையும் தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தேன்.

கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஹெலிகாப்டர்கள், இறங்கு தள வசதி மற்றும் தொலைதூர தொடர்பு வசதி ஆகியவற்றுடன் பிரத்யேக கடற்படை நிலையம் ஒன்றினை விரைவில் நிறுவிட மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களை கேட்டுக் கொண்டேன்.

மேலும், ஒகி புயலினால் ஏற்பட்ட கடுமையான பாதிப்புகளை கருத்தில் கொண்டு, மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களிடம் கீழ்க்கண்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவினை சமர்ப்பித்தேன்:

1) தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 747 கோடி உடனடியாக விடுவிக்க வேண்டும்;

2) தற்போது பேரிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரண தொகையினை உயர்த்தி வழங்க வேண்டும் எனவும், குறிப்பாக, உயிரிழப்பிற்கு ரூபாய் 4 லட்சத்திலிருந்து ரூபாய் 10 லட்சமாகவும், ஊனமடைந்தவர்களுக்கு ரூபாய் 2 லட்சத்திலிருந்து ரூபாய் 5 லட்சமாக உயர்த்தவும், வாழை மரங்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 13,500/–ரூபாயிலிருந்து 1,25,000/– ரூபாயாகவும், ரப்பர் மரங்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 18,000/– ரூபாயிலிருந்து 2,50,000/– ரூபாயாகவும் உயர்த்த வேண்டும் என்றும்;

3) புயல், காற்று மற்றும் மழையினால் பாதிக்கப்படும் உயர் அழுத்த மின்விநியோக கட்டமைப்பு, மின் மாற்றிகள், துணை மின்நிலையங்கள் மற்றும் 11 கிலோவோல்ட்டுக்கு அதிகமான உயர் மின்அழுத்த பாதைகள் ஆகியவற்றிற்கும் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவி அளிக்க வேண்டும் என்றும்;

4) மத்திய அரசின் 90 சதவிகித மானியத்துடன், 1500 உயர் மின்அதிர்வெண் கம்பியில்லா தொலை தொடர்பு சாதனங்கள் (High Frequency wireless sets) வழங்கவும், தமிழ்நாட்டிலுள்ள கடலோரங்களில் உயர்மின் அதிர்வெண் கட்டுப்பாட்டு அறைகளை அமைக்கவும், உயர்மின் அதிர்வெண் சேனல்களை உபயோகிக்க மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்றும்;

5) மீனவர்களுக்கு அவ்வப்போது வானிலை பற்றிய அறிவிப்புகளை தமிழில் தெரியப்படுத்த பிரத்யேக செயற்கை கோள் ரேடியோ அலைவரிசை

(Dedicated Satellite Radio Channel) ஒன்றினை உடனடியாக அமைக்க வேண்டும் என்றும்;

6) மீனவர்களின் பிரச்சினைகளுக்கு, குறிப்பாக கன்னியாகுமரி மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண தொலைதொடர்பு வசதி, மீன் பதப்படுத்தும் பூங்கா போன்ற அனைத்து வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுகம் ஒன்றினை ஏற்படுத்த வேண்டும். மேலும், கடல் அரிப்பினை தடுக்கும் பொருட்டு, கடல் அலைதடுப்புச் சுவர்கள் அமைக்க வேண்டும். இப்பணிகளுக்கென 4,218 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்றும்;

7) மீன் பிடிக்க சென்று நாளது தேதி வரை கரை திரும்பாத தமிழ்நாட்டு மீனவர்கள் அனைவரையும் தேடி கண்டுபிடித்திட மத்திய பாதுகாப்புத் துறைக்கு மாண்புமிகு பாரத பிரதமர் உத்தரவிட வேண்டும். குறிப்பாக, ஆழ்கடலுக்கு சென்றுள்ள கடைசி மீனவர் கிடைக்கின்ற வரையில் தேடுதல் பணி தொடர வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளோம்;

8) ஒகி புயலினால் ஏற்பட்ட சேதங்களுக்கான மீட்பு, நிவாரணம் மற்றும் நிரந்தர சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 9,302 கோடி ரூபாயை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும்;

நான் அளித்த கோரிக்கைகளை கனிவுடன் கேட்ட மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள், அவற்றை கவனமுடன் பரிசீலித்து ஆவன செய்வதாக கூறினார்கள். அதனைத் தொடர்ந்து ‘‘ஒகி’’புயலின் பாதிப்புகளை மத்திய குழு ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் முதற்கட்ட நிவாரணமாக 133 கோடி ரூபாய் மத்திய அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

‘‘ஒகி’’ புயல் சம்பந்தமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இயல்பு நிலை விரைவாக திரும்ப மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டதன் விளைவாக, அம்மாவட்டம் குறுகிய காலத்தில் இயல்பு நிலைமைக்கு திரும்பியது மட்டுமல்லாமல், 3522 மீனவர்கள் பத்திரமாக கரை திரும்பியுள்ளனர்.

'ஒகி' புயலால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் **8.1.2018** வரை மாண்புமிகு அம்மாவின் அரசால் எடுக்கப்பட்ட பின்வரும் நிவாரண உதவிகள் வழங்கியுள்ளது :—

- ❖ 'ஒகி' புயலின்போது மீன்பிடிக்க கடலுக்குச் சென்று உயிரிழந்த 14 மீனவர்களுக்கு தலா 20 லட்சம் ரூபாய் நிவாரண உதவியாக 2 கோடியே 80 லட்சம் ரூபாய்.

- ❖ 'ஒகி' புயலினால் ஏற்பட்ட பல்வேறு நிகழ்வுகளினால் உயிரிழந்த 14 மீனவர் அல்லாத நபர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் நிவாரண உதவியாக 1 கோடியே 40 லட்சம் ரூபாயும்,

- ❖ 'ஒகி' புயலின் போது மரம் விழுந்தது, மின் கம்பங்கள் சாய்ந்தது போன்ற காரணங்களால் காயமடைந்த 20 நபர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும், சிறு காயம் அடைந்த 7 நபர்களுக்கு தலா 12 ஆயிரத்து 700 ரூபாயும், 2 நபர்களுக்கு தலா 4 ஆயிரத்து 300 ரூபாயும் நிவாரண உதவியாக 10 லட்சத்து 97 ஆயிரத்து 500 ரூபாயும்,

- ❖ 30 ஆயிரத்து 778 மீனவர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் தொகையாக தலா 5 ஆயிரம் ரூபாயாக மொத்தம் 15 கோடியே 38 லட்சத்து 90 ஆயிரம் ரூபாயும்,

- ❖ வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 1,524 மலைவாழ் குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் நிவாரணமாக 76 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயும்,

- ❖ முழுவதுமாக சேதமடைந்த 1,096 குடிசைகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபாயும் பகுதியாக சேதமடைந்த 5,990 குடிசைகளுக்கு தலா 4 ஆயிரத்து 100 ரூபாயும் என நிவாரணமாக மொத்தம் 3 கோடியே 39 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- ❖ சேதமடைந்த 63 கைத்தறி மூலப்பொருட்களுக்கும், 31 உபகரணங்களுக்கும் தலா 4 ஆயிரத்து 100 ரூபாய் நிவாரணமாக மொத்தம் 3 லட்சத்து 85 ஆயிரத்து 400 ரூபாயும்,

- ❖ காணாமல் போன 234 மீனவர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் தொகையாக தலா 5 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 11 லட்சத்து 70 ஆயிரம் ரூபாயும்,

- ‘ஒகி’ புயலின்போது இம்மாவட்டத்தில் உயிரிழந்த
  24 பசு மற்றும் எருமை மாடுகளுக்கு தலா 30 ஆயிரம் ரூபாயும்,
  2 காளை மாடுகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபாயும்,
  30 கன்றுகளுக்கு தலா 16 ஆயிரம் ரூபாயும்,
  149 ஆடுகளுக்கு தலா 3 ஆயிரம் ரூபாயும்,
  கோழி போன்ற 7450 பறவைகளுக்கு தலா 100 ரூபாயும்
  என மொத்தம் 7,655 உயிரினங்களுக்கு 24 லட்சத்து
  42 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

- ‘ஒகி’ புயலின்போது கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று, பிற மாநிலங்களில் கரை ஒதுங்கி தமிழ்நாட்டிற்கு திரும்பி வருவதற்கான உணவுப் பொருள் செலவினமாக 31 லட்சத்து 14 ஆயிரம் ரூபாயும், படகுகள் மூலம் சொந்த ஊருக்கு திரும்பி வருவதற்கான எரிபொருள் செலவினமாக 2 கோடியே 20 லட்சத்து 95 ஆயிரத்து 800 ரூபாயும் என மொத்தம் 2 கோடியே 52 லட்சத்து 9 ஆயிரத்து 800 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்பதையும்,

என மொத்தம் 26 கோடியே 38 லட்சத்து 15 ஆயிரத்து 700 ரூபாய் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒகி புயலினால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வாழை, ரப்பர் மரங்கள் மற்றும் கிராம்பு ஆகிய தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்த விவசாயிகளுக்கு முதற்கட்ட கணக்கெடுப்புப் பணி முடிவுற்றதும், வாழ்வாதாரத் தொகுப்புத் திட்டத்தை அறிவித்தேன்.

அதன்படி, வாழை மரங்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ், எக்டருக்கு 13,500 ரூபாயும், சாதாரண முறை சாகுபடிக்கு எக்டருக்கு 35,000 ரூபாயும், திசு வளர்ப்பு சாகுபடி முறைக்கு எக்டருக்கு 50,000 ரூபாயும் ஆக மொத்தம் பாதிக்கப்பட்ட வாழைப் பயிருக்கு எக்டருக்கு 48,500 முதல் 63,500 ரூபாய் வழங்கவும்,

ரப்பர் மரப் பயிருக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ், 18,000 ரூபாயும், மறுசாகுபடி செய்யவும், ஊடுபயிராக வாழை அல்லது அன்னாசி சாகுபடி செய்ய எக்டருக்கு 50,000 ரூபாயும், தேனீ வளர்ப்பு முறையினை ஊக்குவிக்க 32,000 ரூபாயும் ஆக மொத்தம் எக்டருக்கு ஒரு லட்சம் ரூபாய் வழங்கவும்,

கிராம்பு பயிரினைப் பொருத்தவரை, மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ், 18,000 ரூபாயும் மாநில நிதியின் கீழ், 10,000 ரூபாயும் ஆக மொத்தம் எக்டருக்கு 28,000 ரூபாயும் வழங்க உத்தரவிட்டு, முதன் தவணையாக, மாநில நிதியிலிருந்து 3 கோடியே 56 லட்சம் ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டு 29.12.2017 அன்று ஆணை வழங்கப்பட்டது.

சிறப்புக் குழுக்கள் மூலம் போர்க்கால அடிப்படையில் கணக்கெடுப்புப் பணியினை முடிக்க நான் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதன் விளைவாக, தற்போது, பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான கணக்கெடுப்புப் பணி முழுவதுமாக முடிவுற்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் 5,468 எக்டர் பரப்பில் தோட்டக் கலைப் பயிர்களும், 537 எக்டர் பரப்பில் வேளாண்மை பயிர்களும் ஆக மொத்தம் 6005 எக்டர் பரப்பிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் 489 எக்டேரிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 131 எக்டேரிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்துள்ளனர். அதன்படி, மாநில பேரிடர் நிவாரண நிதி வரையறையின்படி 33 சதவீதத்திற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்ட பல்வேறு பயிர்களுக்கு உரிய இடுபொருள் நிவாரணம் கணக்கிடப்பட்டு, இந்த 3 மாவட்டங்களுக்கும் தோட்டக் கலை பயிர்களுக்கு 10 கோடியே 20 லட்சம் ரூபாயும், வேளாண் பயிர்களுக்கு 79 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 10 கோடியே 99 லட்சம் ரூபாய் கணக்கிடப்பட்டு, விரைவில் அதற்கான அரசாணை வெளியிட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, மாண்புமிகு அம்மாவின் அரசு துரிதமாக, வேகமாக அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து உள்ளது என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் திரு.பிரின்ஸ் அவர்கள் ஆவேசமாக இங்கே பேசினார். ஆகவே, அவர்களுடைய ஆட்சி மத்தியிலே எத்தனை ஆண்டு காலம் ஆட்சி இருந்தது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்பொழுது எல்லாம் நீங்கள் சொன்ன அந்த கோரிக்கை எளிதாக நிறைவேற்றப்பட்டு இருக்கலாம். அங்கே ஹெலிகாப்டர் தளம் அமைக்க வேண்டும்

என்று கோரிக்கை வைத்தீர்கள். அது மத்திய அரசிடம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை அப்பொழுதே பெற்றுத் தந்திருந்தால் உடனடியாக பாதிக்கப்பட்ட மீனவர்களை மீட்டெடுத்து இருக்கலாம். அதை செய்ய தவறிவீட்டீர்கள். ஆனால், அம்மாவினுடைய அரசு எப்பொழுது எல்லாம் மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்களோ, அவர்களை மீட்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, மத்திய அரசிடத்திலே விரைவாக ஹெலிகாப்டர் தளம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறோம். அவர்கள் நிறைவேற்றி தருவார்கள் என்று எண்ணுகிறோம் என்பதை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**